Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.16/2025

Deposition of PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : சரஸ்வதி | Village | : |
| Father's / Husband's Name | : குணசேகரன் | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 12th day of February 2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது நெ.27, ரவீந்தர் நகர், முருகப்பா பாலிடெக்னிக் அருகில் வசிக்கின்றேன். இந்த வழக்கில் இறந்துபோன குணசேகரன் என்னுடைய கணவர். எனக்கு 2 பிள்ளைகள். மூத்தமகன் பெயர் விஷ்ணு, இளைய மகன் பெயர் தீபக். என்னுடன் பிறந்தவர்கள் 4 பேர்கள். ஆஜர் எதிரி கணேசன் தான் என்னுடைய மூத்த அண்ணன், 2 வது அக்கா கலைவாணி, 3 வது அக்கா ராணி, 4 வது நான், எனக்கு அடுத்து எனது தங்கை ஜெயலட்சுமி. இறந்துபோன என்னுடைய கணவர் துணி வியாபாரம் செய்து வந்தார். வெளியில் சென்று XL வண்டியிலும் பின்பு என்னுடைய தாயார் வீடான 43/36, ரவீந்தர் நகர் முருகப்பா பாலிடெக்னிக் அருகில் உள்ள வீட்டில் வைத்து என்னுடைய கணவர் துணி வியாபாரம் செய்து வந்தார். என்னுடைய தங்கை ஜெயலட்சுமியின் கணவர் பெயர் மணிவண்ணன். கடந்த 27.05.2024 அன்று என்னுடைய கணவர் காலையில் வியாபாரத்திற்கு சென்றுவிட்டு மதியம் 1.30 மணியளவில் எங்களுடைய வீட்டிற்கு வந்தார். வந்துவிட்டு லோன் காசு கட்டவேண்டும் என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார். நான் அதன்பிறகு வீட்டில் படுத்துவிட்டேன். சாயங்காலம் 4.45 மணிக்குமேல் என்னுடைய அக்கா கலைவாணி என்னுடைய வீட்டிற்கு வந்து என்னுடைய வீட்டுக்காரின் தலையில்

என்னுடைய அண்ணன் எனது அம்மா வீட்டில் அடித்து விட்டதாக என்னை கூட்டிச் சென்றார். நான் போனபோது எனது அம்மா வீட்டு வாசலில் என்னுடைய வீட்டுக்காரர் தலை குப்புற விழுந்துகிடந்தார். அவரது பின்னல் தலையில் இருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. அங்கே என்னுடைய அக்கா கலைவாணி, தங்கச்சி ஜெயலட்சுமி, தங்கச்சி ஜெயலட்சுமியின் கணவர் மணிவண்ணன் ஆகியோர் இருந்தார்கள். எனக்கு வேறு எதையும் பார்க்க தோனவில்லை. எனது அண்ணன் கம்பை வைத்துக்கொண்டிருந்தார். நான் என்ன என்று என் அண்ணனிடம் கேட்டேன் அதற்கு அவர் என்னை அசிங்கமாக திட்டியதால் அடித்ததாக சொன்னார். நான் எனது கணவரை தூக்கினேன். அவரது வாயில் இருந்து ரத்தம் வந்தது. சிறிது நேரம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது. எனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னார். இது சம்மந்தமாக நான் திருமுல்லைவாயல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அது இது தான். அது **அ.த.சா.ஆ.1.** போலிஸ் என்னை விசாரித்துக் கொண்டார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய அண்ணன் எனது கணவரை அடித்ததை நான் நேரடியாக பார்ககவில்லை. என்னுடைய அண்ணன் கணேசன் கொஞ்சம் புத்தி சுவாதீனம் இல்லாதவர் என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் வீட்டிற்கும் எனது அம்மா வீட்டிற்கும் பத்து நிமிடம் நடக்கும் தூரம் இருக்கும். என்னுடைய அக்கா கலைவாணிக்கு என்னுடைய தங்கை ஜெயலட்சுமிக்கு போன் மூலம் தகவல் சொல்லியிருக்கிறார். எனக்கு அலைபேசி இருக்கின்றது. என்னுடைய அலைபேசிக்கு தகவல் சொல்லவில்லை. நான் போகும்பொழுது என்னுடைய அண்ணன் கையில் கம்பு வைத்திருந்தார். அங்கேயே தான் நின்று கொண்டிருந்தார். நான் 2, 3 முறை காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக சென்றேன். அவ்வாறு விசாரணைக்கு செல்லும்பொழுது எனக்கு போலிசார் சம்மன் கொடுத்தார்கள். அந்த சம்மனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொன்ன நேரம், சொன்ன இடம், சொன்ன விதத்தில் எதனையும் பார்க்கவில்லை என்றாலும் பொய் புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**